புரட்சி பாரதம் கட்சியின் மாநில இளைஞரணி செயலாளர் ஆனந்தன் மற்றும் 200க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் அக்கட்சியிலிருந்து விலகி திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் சே.பிரேம் ஆனந்த் ஏற்பாட்டில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சருமான ஆவடி சாமு.நாசர் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள் உடன் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

இரா.துரைராஜ் – எம்.கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு!

சைதை கிழக்கு - மேற்குப் பகுதி நிர்வாகிகள் கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார்!

சென்னை, அக்.5- சைதை கிழக்கு மேற்கு பகுதி கழக செயலாளர்கள் இரா.துரைராஜ் எம்.சி., எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. ஆகியோர் ஏற்பாட்டில் அவைத் தலைவர்கள் இ. முருகேசன் டி.என்.சிவமணி தலைமையில் நடைபெற்ற சைதை கிழக்கு மேற்கு பகுதி திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் நடைபெற உள்ள சட்ட மன்ற தேர்தலில் நிர்வாகிகள் ஆற்ற வேண்டிய கள பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி பேசினார்.

நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன் வழக்கறிஞர் எம். ஸ்ரீ தரன் களக்காடி எல்லப்பன் மின்னல் கந்தப்பன் பகுதி நிர்வாகிகள் ஆர்.ராஜ்குமார் மு. ஆரோக்கியம் ஆர்.அருணகிரி மு.பாக்கியலட்சுமி சைதை த.சம்பத் ஆர். ரமேஷ் வி.பி.ஜானகிராமன் கவிதா கௌதமன்

வட்ட கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர் தா. மோகன்குமார் நா.ராதா கிருஷ்ணன் எல். ஆரோக்கியராஜ் சைதை ஆ.வரதன் க.மணி கோட்டூர் கோ.சண்முகம் நேருநகர் எஸ்.பாட்சா வே.முருகன் சை.மு.சேகர் அட்கோ கமலநாதன் நா.தமிழரசு எஸ்.பி.கோதண்டம் எம். நாகா கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை செயலாளர் எம். எஸ்.அரிபாபு மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக் நா. மணிகண்டன் கோ.பாஸ்கர்

இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் கோட்டூர் எஸ்.பிரகாஷ் ஆர்.கிருஷ்ணகுமார் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் அணிகளின் மாவட்ட நிர்வாகிகள் பகுதி அணிகளின் நிர்வாகிகள் இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு சிற்றுண்டி வழங்குகிறார்!

எழும்பூர் 99வது வட்டத்தில் 'அன்னம் தரும் அமுதக் கரங்கள்' நிகழ்ச்சி!

வட்டச் செயலாளர் ஆர்.எம். ரங்கநாதன் வேண்டுகோள்!

சென்னை, அக்.5- எழும்பூர் 99வது வட்டச் செயலாளர் ஆர்.எம். ரங்கநாதன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி, 99 வது வட்டத்தில் இன்று (05.10.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 7.00 மணியளவில், சண்முகராயன் தெரு - பொன்னன் தெரு சந்திப்பில் நடைபெறவுள்ள 'அன்னம் தரும் அமுதக்கரங்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு காலை சிற்றுண்டி உணவு வழங்குவதற்கு வருகை தருகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு முன்னிலை வகிக்கிறார்.

எனவே இந்நிகழ்வில் எழும்பூர் 99வது வட்டத்திற்குட்பட்ட மாவட்டக் கழக பகுதிகழக வட்டகழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பாகமுகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி நிலை உறுப்பினர்கள் (BLC3), மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், மகளிர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு 99 வது வட்ட செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டம்

மதுரவாயல் தெற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்,எல்,ஏ. அறிக்கை!

சென்னை, அக்.5- சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் போரூர் மவுன்ட் பூந்தமல்லி சாலையில் (முருகன் இட்லி கடை அருகில்) உள்ள ஏ.ஜி.டி. பார்க் ஹோட்டலில் இன்று (05.10.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணியளவில் பகுதி கழக அவைத் தலைவர் பி.எம்.செல்வராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.

ஆகவே, இக்கூட்டத்திற்கு மதுரவாயல் தெற்குப் பகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொருள்: 13.10.2025 அன்று துணை முதலமைச்சர் அவர்கள் வருகை. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி மாநிலம் – வில்லியனூர் பாண்டியன் நகரில்

ரூ.75 லட்சம் செலவில் புதிய சாலை அமைக்கும் பணி!

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

புதுச்சேரி, அக்.5- புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்றத் தொகுதி, வில்லியனூர் கூடப்பாக்கம் மெயின் ரோடு தொடங்கி பாண்டியன் நகர் மெயின் ரோடு மற்றும் 10 குறுக்கு வீதிகளுக்கு சாலை அமைக்கக் கோரி அப்பகுதி மக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்ததின் அடிப்படையில் ரூபாய் 75 லட்சம் ஒதுக்கீடு பெற்று பொதுப்பணித் துறை சாலைகள் மற்றும் கட்டிடங்கள் வடக்கு பிரிவு மூலம் மேற்கொள்ளப்படும் பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சி இன்று காலை 10.30 மணிக்கு நடந்தது.

இந்த நிகழ்ச்சியில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் கலந்து கொண்டு, புதிய தார் சாலை அமைக்கும் பணியை பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இதில், பொதுப்பணித் துறை சாலைகள் மற்றும் கட்டிடங்கள் வடக்கு பிரிவு செயற்பொறியாளர் வைத்தியநாதன், உதவிப் பொறியாளர் சீனுவாசராம், இளநிலைப் பொறியாளர் குலோத்துங்கன் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் கிருஷ்ணமூர்த்தி, ராம்ரோப், சுப்புராயிலு, பிரவீன், பிரதீப், கார்த்தி, சரவணன், சிலம்பரசன், கஸ்தூரி, அமுதா, தீபா, அபிராமி, சிவா, சரண்யா, திமுக பொதுக் குழு உறுப்பினர்கள் ராமசாமி, செல்வநாதன், வர்த்தக அணி அமைப்பாளர் ரமணன், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் செல்வநாதன், சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் ஹாலித், ஆதிதிராவிடர் அணி தலைவர் பழனிசாமி, தொமுச தலைவர் அங்காளன்,

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பழங்குடியின தலைவர் ஏகாம்பரம், துணை அமைப்பாளர்கள் சரவணன், காசிநாதன், தேசிகன், காளி, தொகுதி துணைச் செயலாளர் அரிகிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர்கள் சுப்பிரமணியன், ஏழுமலை, கிளைக் கழக நிர்வாகிகள் சபரி, ராஜி, ஜனா, திலகர், தக்ஷிணாமூர்த்தி, தேவநாதன், சேகர், கார்த்திகேயன், கலைமணி, பாலகுரு, கமால்பாஷா, ராமஜெயம், ராஜேந்திரன், முத்து, அருண், அஞ்சாபுலி, நடராஜன், ரகு, கோதண்டம், சூர்யா, அசார், கோபி, மூர்த்தி,சந்தோஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஈரோடு மத்திய மாவட்டம் பவானி தொகுதிக்கு உட்பட்ட அம்மாபேட்டை மத்திய ஒன்றிய ஊராட்சிகளில் புதிதாக நியமிக்கப்பட உள்ள இளைஞர் அணி ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள் பட்டியலை மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன் திருவள்ளூர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும் மேற்பார்வையாளர் கே.சுரேஷ்குமார் ஆகியோரிடம் அம்மாபேட்டை மத்திய ஒன்றிய கழகப் பொறுப்பாளர் தா.அசோக்குமார், பேரூர்கழகச் செயலாளர் பெரியநாயகம், ஈரோடு மத்திய மாவட்ட துணை அமைப்பாளர் சன்சுரேஷ் ஒப்படைத்தார்கள். உடன் மாவட்ட இளைஞர் துணை அமைப்பாளர் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, டி.பிரியா குமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக் , குணா, கார்த்திகேயன், நவீன் குமார், ஆனந்த் பிரபாகரன், கவாஸ்கர், பெரியசாமி, சஞ்சய் திருமலை, தியாகு சந்தர், ரோசன் உள்பட பலர் உள்ளனர்.

மன்னார்குடியில் திறப்பு விழா காணவிருக்கும் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் பெயர் சூட்டப்பட்ட அதிநவீன பேருந்து நிலைய கட்டுமனபணிகளை தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பார்வையிட்டு அடிப்படை வசதிகள் உள்ளிட்ட ஆய்வுகள் மேற்கொண்டார். நகர செயலாளர் வீரா.கணேசன், நகர்மன்ற தலைவர் மன்னை.த.சோழராஜன், வர்த்தகர் சங்க தலைவர் ஆர்.வி.ஆனந்த், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த், மாவட்ட பிரதிநிதி ஜே.உத்தமன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் நகர்மன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

2026 சட்டமன்றத் தேர்தல் குறித்து திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. சிறப்புரை!

மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

இன்று 05.10.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி அளவில் திருத்தணி - சென்னை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள GRT REGENCY ஹோட்டலில் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் கழக செயலாளர்களுடன் கழக கொள்கை பரப்பு செயலாளரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் ஆலோசனை நடத்திட உள்ளதால் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து.

திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

இரக்கம், துயரம், துன்பம், இவற்றின் வெளிப்பாடே அழுகை!

மனிதநேயமிக்க அமைச்சரின் அழுகையை அரசியலாக்காதீர்!

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!

சென்னை அக்: 5 தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவர் கு. தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

கடந்த சில தினங்களுக்கு முன்பு கரூரில் நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவத்தினால் தமிழ் உறவுகள் 41 பேர் அகால மரணம் அடைந்திருக்கும் செய்தி உலகத்தையே உலுக்கி உள்ளது.

இதில் யார் மீது குற்றம் சொன்னாலும், யார் மீது அடுக்கடுக்காகப் புகார்களை அடுக்கினாலும் பிரிந்தவர்கள் திரும்ப வரப்போவது இல்லை, அவர்கள் குடும்பங்களில் ஏற்பட்டுள்ள துயரங்களும் தீரப் போவதில்லை.

நிலைமை இவ்வாறு இருக்க பிணத்தின் மீது அரசியல் செய்து பிழைப்பு நடத்தும் சிலர் இதை அரசியலாக்க முயன்று வருவது வேதனை. எந்த கட்சி எந்தக் கூட்டம் நடத்தினாலும் அதில் எந்தவிதமான பாதிப்பு ஏற்பட்டாலும் உடனடியாக அரசு களத்தில் இறங்கியே ஆக வேண்டும்.

இந்தப் பெரும் சோகம் நடந்ததைக் கேள்விப்பட்ட சிலநிமிடங்களுக்குள்ளாகத் தனது இதயப்பூர்வமான இரக்கத்துடன் உடனடி நடவடிக்கைகளில் இறங்கி, அதிகாரிகளை அழைத்து, மனித உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கோடு அரசு இயந்திரத்தை முடக்கி விட்ட தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகள் போற்றுதலுக்கும் பாராட்டுக்கும் உரியது.

அதைவிட நடந்த சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டவுடன் அருகாமை மாவட்ட அமைச்சர்களைத் தொடர்பு கொண்டு உடனடியாகக் கரூருக்கு விரைந்து சென்று, மனித உயிர்களைக் காப்பாற்றுங்கள் என்று கட்டளையிட்ட முதலமைச்சரின் ஆணையை ஏற்று, அருகாமை மாவட்ட அமைச்சரான பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் களப்பணி ஆற்றிக்கொண்டிருந்த நிலையில் கரூருக்குத் தன் அதிவேகப் பயணத்தைத் தொடங்கி நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களை மருத்துவமனையில் சந்தித்து மனித நேயத்தோடு மக்களைக் காக்கத் தன் அத்தனை முயற்சிகளையும் உண்மையாக மேற்கொண்டு பம்பரமாகச் சுழன்று களத்தில் இறங்கினார்.

கண்ணெதிரே பிஞ்சுக் குழந்தைகள், தாய்மார்கள், குடும்பத்தைத் தாங்கி நிற்கும் தந்தைமார்கள் மற்றும் எதிர்காலத் தலைமுறைகள் எல்லாம் எதிர்பார்ப்பு ஏதும் இன்றிக் கூட்டத்திற்கு வந்து, விரும்பத்தகாத செயலினால் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டதை நேரில் கண்ட குழந்தை உள்ளம் கொண்ட அமைச்சர் அவர்கள், மாண்டுபோன உயிர்களையும் குறிப்பாக வாழ்க்கையில் கொஞ்சமும் அனுபவிக்காத பிஞ்சு குழந்தைகளின் மரணத்தையும் பள்ளி மாணவச்செல்வங்களின் மரணத்தையும் நினைத்து உயிர்களின் உணர்வியல் வெளிப்பாடாகிய கண்ணீர் விட்டு அழுத காட்சி உள்ளபடியே அவர் கண்களில் மட்டுமல்ல காண்பவர் அத்தனை பேர் கண்களிலும் கண்ணீரை வரவழைத்தது என்பதுதான் உண்மை.

இத்துயர நிகழ்வில் நாடே கண்ணீர் சிந்தும் சூழலில் அமைச்சர் ஒருவர் தன் உணர்வை வெளிப்படுத்தியது எந்த விதத்தில் தவறாகும்?

அது என்ன... அமைச்சர் என்றால் அழக்கூடாதா? உணர்வு அற்ற இயந்திரமா? அமைச்சர் பெருமக்கள் மக்களில் ஒருவராக இருப்பது குற்றமா?

அமைச்சர் என்பதைத் தாண்டி, சட்டமன்ற உறுப்பினர் என்பதைத் தாண்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அன்பைப் பெற்றவர் என்பதையும் தாண்டி, களத்தில் உள்ள ஒரு சாதாரண மனிதன் தான் தானும் என்ற நிலையில் மக்கள் மடிந்து மரணிக்கும் காட்சிகளைப் பார்த்து அழாமல் இருக்க அமைச்சர் என்ன மனசாட்சி இல்லாதவரா ?

மனிதநேயமிக்கவரின் அழுகையை அரசியலாக்க வேண்டாம். முடிந்தால் மனித இறப்புக்கு உங்களால் முடிந்த ஒரு சொட்டுக் கண்ணீரை விடுங்கள்! இல்லையென்றால் மனிதநேயமற்ற, மாண்பற்ற மனிதர்களாய் வாழ்ந்துவிட்டுச் செல்லுங்கள்!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தாம்பரம் G H மருத்துவமனை அன்னை அஞ்சுகம்மாள் ஆட்டோ ஓட்டுனர் சங்கம் சார்பில் நடைபெற்ற விழாவில், தாம்பரம் மாநகர செயலாளர்,எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்றார். இதில் 4வது மண்டல குழு தலைவர் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ். 5வது மண்டல குழு தலைவர், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.இந்திரன், மாநகர விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் டைகர்.எஸ்.சிவா, மாமன்ற உறுப்பினர் சி.சுரேஷ், வட்ட செயலாளர் எம்.வினோத், மாநகர அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் ந.சீனிவாசன் ஆகியோருடன் ஆட்டோ ஓட்டுனர் சங்க நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.